# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 19.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண்.SA4756/F/2019**

திரு M. அருள் ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
இயக்கமும் பராமரிப்பும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செய்யாறு,
திருவண்ணாமலை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 12.02.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 18.03.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 19.05.2019 |

******

# ஆணை

இன்று (19.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு M. அருள் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஒப்புதல் பெற்ற திரு G..வள்ளிகாந்தன், உதவி செயற்பொறியாளர், நகரம், செய்யாறு, காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 12.02.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், 462/8 என்ற சர்வே எண்ணில் 10HP குதிரைத்திறன் பதிவு செய்துள்ள எண்.008833 என்ற எண்ணிற்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டதற்கு உண்டான ஒப்புதல் கடிதம் நகல், 01.01.1999 முதல் 01.01.2000 வரையிலான

இலவச மின்சார இணைப்பு வேண்டி பதிவு செய்தவர்கள் பட்டியல், இலவச மின்சாரம் வழங்கப்பட்ட விவசாயிகள் பெயர் மற்றும் மின் இணைப்பு எண்களின் சர்வே எண். வழங்கவும், இலவச மின்சாரம் பெற விண்ணப்பித்து தள்ளுபடி செய்யப்பட்ட நபர்களின் பெயர்களின் பட்டியல் போன்ற இலவச மின்சாரம் வழங்குவது தொடர்பான தகவல்களை குறிப்பிட்டு வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர் அவர்கள், தமிழ்நாடு மின்சார வாரியம், செய்யாறு கிளை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 28.02.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் முழுமையான தகவல் வழங்கவில்லை என்றும், தான் கோரிய உரிய தகவல் வழங்கக் கேட்டும், 18.03.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகு மேல்முறையீட்டாளர் 22.03.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்கவில்லை என தெரிவித்தும், தான் கோரிய தகவல் பெற்று வழங்கவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 19.05.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக 28.02.2019 மற்றும் 22.03.2019 தேதியிட்டு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. ஆணையம் அவற்றை பரிசீலனை செய்ததில் மேல்முறையீட்டாளருக்கு பொது அதிகார அமைப்பின் ஆவணங்களிலிருந்து வழங்கக்கூடிய தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லை என ஆணையம் முடிவு செய்து, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/- ச.த. தமிழ்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.SA4756/F/2019</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
இயக்கமும் பராமரிப்பும்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செய்யாறு,
திருவண்ணாமலை மாவட்டம்.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு M. அருள்,
த/பெ.முருகன்,
எண்.350, பிராமணர் தெரு,
குத்தனூர், வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

**Copy to: Judgement File.**

**Spare/ AM/PS - 240919**